# கொளத்தூர் தொகுதியில் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து நல உதவிகளை வழங்கினார் முதல்வர்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் 18.26 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிளாம்பாக்கம் காவல் நிலையத்தை திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 17.65 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் பாக முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மற்றும் பாக இளைஞர் அணியினருக்கு செல்போன், கை கடிகாரம், கொளத்தூர் தொகுதியில் மேற்கொண்ட பணிகள் குறித்த துண்டுப்பிரசுரங்கள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் பாக முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மற்றும் பாக இளைஞர் அணியினருக்கு செல்போன், கை கடிகாரம், கொளத்தூர் தொகுதியில் மேற்கொண்ட பணிகள் குறித்த துண்டுப்பிரசுரங்கள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தனியார் உடற்பயிற்சிக் கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் சேதமடைந்த இருசக்கர வாகனங்களுக்கு மாற்றாக பாதிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு புதிய இருசக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிப்பறைகள் போன்றவற்றை பார்வையிட்டார்.